**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC.107 /2018**
**Deposition of P.W. 1**

Name : ஸ்டாலின்
S/o, D/o, W/o :
Caste :
Religion :
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**Dated:30.08.2023**
**(Accused Present).**
**முதல் விசாரணை-**

நான் கஞ்சிக்குழியில் வசித்து வந்தேன். தற்போது காட்டாத்துறையில் வசித்து வருகிறேன். முன்பு கப்பியறை பஞ்சாயத்தில் பிளம்பிங் கான்டிராக்ட் எடுத்து வேலை செய்து வந்தேன். தற்போதும் மேற்படி வேலையை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். 22.04.,2010 ம் தேதி எதிரி எனது தங்கை டாலியை கெட்டவார்த்தையால் பேசி, அடித்து கொலை செய்யும் நோக்கத்தில் பாலத்திலிருந்து கீழே தள்ளி விட்டதால் எனது தங்கைக்கு இடுப்பு எலும்பு ஒடிந்து விட்டது. அது சம்மந்தமான குற்றவியல் வழக்கு தக்கலை நீதிமன்றத்தில் நடந்து வந்தது. மேற்படி வழக்கில் நான் அரசு தரப்பு சாட்சி ஆவேன். 22.03.2014 அன்று பூக்கடை, ஆயிரம்பிலாவிளை, மருதங்கோட்டில் காலை 11.00 மணியளவில் நான் நின்றுக்கொண்டிருந்த போது அங்கு வந்த எதிரி எனது தங்கையை தாக்கி வழக்கில் நான் சாட்சியம் அளித்து அதனால் எதிரிக்கு தண்டனை கிடைத்தால் என் குடும்பத்தையே அழித்து விடுவதாக மிரட்டினான். அதற்கு நான், நீ என்ன செய்தாலும் நான் வழக்கை வாபஸ் பெற மாட்டேன் என்று கூறினேன். அதற்கு எதிரி இதற்கு ஒரு நாள் சீக்கிரம் தான் முடிவு கட்டுவதாக என்னிடம் கூறினான். பின்னர் 26.03.2014 ம் தேதி காலை 10.30 மணியளவில் நான் புங்கறை, நெல்லிக்குற்றிப்பாறை, இசக்கிஅம்மன் கோவில் பக்கம் நான் சென்றுக்கொண்டிருந்த போது அங்கு வந்த எதிரி என்னை தள்ளைய ஓத்த பயலே என்று கெட்டவார்த்தையால் ஏசி மேற்படி குற்ற வழக்கால் எனக்கு நிறைய பணம் செலவாகி விட்டது என்று கூறி எனது சட்டையை பிடித்து இழுத்து, எனது சட்டை பாக்கெட்டில் இருந்த ரூ.200/- ரூபாயை

எடுத்தான். அப்போது நான் அதை எதிரியின் கையிலிருந்து திரும்ப பெற முயற்சி செய்தேன். அப்போது எதிரி என்னை பார்த்து நானே பெரிய ரவுடி என்றும், எனக்கு எதிராக நீ சாட்சி சொல்லுவியா பிண்டாமோனே என்றும் கூறி அவன் இடுப்பில் வைத்திருந்த வெட்டுக்கத்தியை செத்து போல என்றுக்கூறி எனது கழுத்தை நோக்கி வெட்டினான். நான் எனது இடது கையால் அதை தடுத்த போது எனது இடது கையில் வெட்டுப்பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டது. நான் மேற்கண்டவாறு எனது இடதுகையால் தடுக்காவிட்டால் மேற்படி வெட்டானது எனது இடது கழுத்தில் பட்டு அந்த இடத்திலேயே நான் செத்து போய் இருந்திருப்பேன். எனக்கு ஏற்பட்ட வலியினால் நான் சத்தம் போட்டேன். அதனால் பூக்கடையை சேர்ந்த சதிஸ் மற்றும் புங்கறையை சேர்ந்த செந்தில் ஆகியோர்கள் மற்றும் அங்கிருந்த சிலர் ஓடி வந்து எதிரியை பிடிக்க வந்தார்கள். உடனே எதிரி யாராவது வந்தால் அவர்களையும் வெட்டி விடுவேன் என்ற கூறி கையில் இருந்த வெட்டுக்கத்தியை அங்கும், இங்குமாக சுழற்றினான். அதனால் அந்த வழியாக ஆட்டோ மற்றும் பைக்கில் வந்தவர்களை எதிரி விடாததால் அவர்கள் வந்த வழியே சென்று விட்டார்கள். அப்போது அந்த வழியாக வந்த ஒரு ஆட்டோவில் நான் மருத்துவமனை செல்ல வேண்டுமென்று கூறி அதில் எறினேன். கையில் பட்ட வெட்டுக்காயத்தை ஒரு துணியால் நான் கட்டினேன். பின்னர் நேராக தக்கலை காவல் நிலையத்திற்கு வந்து நடந்த சம்பவத்திற்கு புகார் எழுதிக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு தான். நான் மேற்கண்டவாறு காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு ஆகும். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1. பிறகு நான் அதே ஆட்டோவில் தக்கலை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன்.

(சான்று பொருளை குறியீடு செய்வதற்காக அ.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).